முழுப் பதிப்புரிமையுடையது All Rights Reserved]



கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி
Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Minist

**கல்வி அமைச்சு**

**தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை - தமிழ்மொழி அலகு**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர்தர)ப் பரீட்சை - 2024

**General Certificate of Education (Adv. Level) Examination - 2024**

தமிழ் **II**
**Tamil II**

**72 T II**

*மூன்று மணித்தியாலம்*
***Three hours***

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time – 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**சுட்டெண் :………………………**

**அறிவுறுத்தல்கள் :**
- பகுதி **I** இல் உள்ள **மூன்று** வினாக்களுக்கும் பகுதி **II** இல் உள்ளவற்றுள் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கும், எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
- பகுதி **I** இல் முதலாம் வினாவில் **இருபது** வினாக்கள் **தனியாகத்** தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதி, அதனை உமது ஏனைய விடைத் தாள்களின் மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.

## பகுதி – I

01 . எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1. தற்காலத் தமிழில் மொழி இறுதியில் **இடம்பெறாத** எழுத்துக்களைக் கொண்ட தொகுதி
   1) அ, இ, எ 2) ஈ, ஏ, ஆ 3) உ, ஒ, ஏ
   4) ஐ, ஓ, ஔ 5) ஒ, ஔ, எ (……)

2. பின்வருவனவற்றுள் நுனி அண்ண வருடொலியாக அமைவது
   1) ங் 2) வ் 3) ய் 4) ர் 5) ற் (…....)

3. உடனிலை மெய்ம்மயக்கத்திற்கு மட்டும் உரித்தான எழுத்துக்களைக் கொண்ட தொகுதி
   1) க், ச் 2) க், ட் 3) க், ந் 4) ய், ர் 5) ய், ழ் (……)

4. பின்வருவனவற்றுள் ‘ச’கரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்.
   1) பச்சை 2) கட்சி 3) பயிற்சி 4) சோறு 5) பட்சி (……)

5. இடைநிலை **இடம்பெறாது** வந்த சொல்.
   1) அறிஞன் 2) கலைஞன் 3) பொன்னன் 4) உண்டான் 5) ஓதுவான் (……)

6. அத்து சாரியை ஏற்று வந்த சொல்.
   1) நடந்தனன் 2) சிரித்தான் 3) பலவற்றை 4) மரத்தால் 5) சித்திரித்தான் (…….)

7. உவமைத்தொகையாக **அமையாத** சொல்.
   1) மதிவதனம் 2) பிறைநுதல் 3) முத்துப்பல் 4) துடியிடை 5) சுடுசொல் (…….)

8. குறிப்பு வினையாலணையும் பெயராக அமைவது
1) ஓடியவனை 2) படித்தவருக்கு 3) நல்லவரோடு 4) கண்டவனால் 5) பாடியவரது (……)

9. “சங்கீதம் நம் உள்ளங்களை கட்டுப்படுத்துகின்றது”. என்பது
1) செய்வினை 2) செயப்பாட்டு வினை 3) காரணவினை
4) பிறவினை 5) செயப்படுபொருள் குன்றியவினை (……)

10. பின்வருவனவற்றுள் ‘விடு’ துணைவினையாக அமைந்த சொல்.
1) விடமாட்டேன் 2) கைவிட்டேன் 3) விடுவேனா
4) விடுவித்தார் 5) கண்டுவிட்டேன் (……)

11. செயப்படுபொருள் குன்றாத வினையாக அமைவது
1) நடந்தான் 2) ஓடினான் 3) இருந்தான்
4) சிரித்தான் 5) கரைத்தான் (……)

12. மூன்றாம் வேற்றுமையின் காரணப்பொருள் உணர்த்துவது
1) தங்கத்தால் செய்த காப்பு 2) தூரிகையால் வரைந்தான் 3) உழைப்பால் உயர்ந்தான்
4) பாரதியால் எழுதப்பட்டது. 5) தாலிக்கு பொன் உருக்கினான். (……)

13. குற்றியலுகரம் கெட்டுப் புணர்ந்த சொல்.
1) கண்ணீர் 2) எழுதுகோல் 3) தெருவிளக்கு
4) பசுக்கூட்டம் 5) பட்டாடை (……)

14. ஒரு கிலோ வாங்கினேன். இது எவ்வகை ஆகுபெயர்.
1) எண்ணலளவையாகு பெயர் 2) எடுத்தலளவையாகு பெயர் 3) கருவியாகு பெயர்
4) நீட்டலளவையாகுபெயர் 5) தானியாகு பெயர் (……)

15. இய, இயர் ஆகியவை
1) வியங்கோள் வினை 2) ஏவல் வினை 3) தனிவினை
4) கூட்டுவினை 5) செய்வினை (……)

16. பின்வருவனவற்றுள் மாற்றுப்பெயராக அமைவது.
1) மரம் 2) பறவை 3) நிலம் 4) அது 5) காற்று (……)

17. ஆஹா! இந்த மலையின் காட்சி எவ்வளவு அழகாக உள்ளது. இது ஒரு
1) செய்தி வாக்கியம் 2) உணர்ச்சி வாக்கியம் 3) விருப்பு வாக்கியம்
4) வினா வாக்கியம் 5) தனிவாக்கியம் (……)

18. பின்வருவனவற்றுள் “ஐ” உருபு இணைந்தே வரவேண்டிய செயப்படுபொருள்.
1) பொன் பார்த்தேன். 2) மீன் பார்த்தேன். 3) படம் பார்த்தேன்.
4) அம்மா பார்த்தேன். 5) சங்கீதம் கேட்டேன். (……)

19. உலகநடை அறிந்து ஒழுகுதல் என்பதைக் குறிக்கும் தனிச் சொல்.
1) ஒப்புரவு 2) சான்றாண்மை 3) பண்புடைமை
4) நல்குரவு 5) மாண்பு (……)

20. பின்வருவனவற்றுள் சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொற்களைக் கொண்ட வாக்கியம்.
1) நவீன தொழில்நுட்பம் இன்று அதிகம் பயன்படுத்தப்படுகின்றது.
2) கொழுப்புச்சத்துள்ள உணவுகளை உண்ணும் போது கவனமாயிருத்தல் வேண்டும்.
3) சாயங்கால வேளையில் சூரியன் அஸ்தமனமாகும் போது அழகாக இருக்கும்.
4) நீரழிவு நோய்க்கு பாவக்காய் சாப்பிடுவது சிறந்தது என்று சிலர் கூறுகின்றனர்.
5) முதியோர்கள் நமது முதுசம் என்பதை மறக்காதீர்கள். (……)

(20 புள்ளிகள்)

## பகுதி – II

02) அ) பின்வரும் உரைப்பகுதியை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.

முதலாம் குலோத்துங்கன் காலத்திலிருந்து சோழப் பேரரசு வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்குகின்றது. சோழப்பேரரசின் பரப்பு ஓரளவு குறைகின்றது. இலங்கை சோழராட்சியில் இருந்து நீங்கிவிடுகின்றது. முதலாம் குலோத்துங்கனின் ஆட்சித் தொடக்கத்தில் மேலைச்சாளுக்கியரோடு மோதுதல் ஏற்பட்ட போதும் அவனுடைய அரைநூற்றாண்டு கால ஆட்சியுள் பெரும் பகுதி அவரோடு போரில்லாமலே கழிந்தது. குலோத்துங்கன் வேங்கி நாட்டு அரசகுலத்தையும் சேர்ந்தவனாதலால் அங்கும் சோழராட்சி நிலை நிறுத்துவது வில்லங்கமாக இருக்கவில்லை, இவனுடைய மெய்க்கீர்த்திகள் 'புகழ் சூழ்ந்த புணரியகழ் சூழ்ந்த புவியில்', 'புகழ் மாது விளங்கச் செயமாது விரும்ப', 'திருமன்னிவிளங்கு இரு குவடனைய தன்' என மூன்று தொடக்கங்களையுடையன: இம்மன்னனே சோழப் பெருமன்னர்களுள் மிக நீண்ட காலம் ஆட்சி செய்தவனாவான். இவனுடைய ஆட்சி சுமார் அரை நூற்றாண்டு காலம் நடைபெற்றது. இவனைப்பற்றிய பல மெய்க்கீர்த்திகள் எழ இது ஒரு காரணமாகலாம்.

இவன் ஆட்சிக்கு வந்த போது ஆட்சியுரிமைப் பற்றித் தகராறு இருந்திருக்கிறது. ஆட்சியிலே தன்னை நிலைப்படுத்திக் கொள்வதற்காக இவன் புலவர் தன்னைப் புகழ்ந்து பாடும்படி தூண்டியிருக்கலாம். அவற்றுள் "புகழ் சூழ்ந்த புணரியகழ் சூழ்ந்த புவியில்" என்பது இங்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது. ஆட்சிப்பரப்பு முன்பு இருந்ததிலும் குலோத்துங்கன் காலத்திலே குறைந்த போதிலும் பூமி முழுவதும் தன்னுடைய ஆட்சியில் இருந்ததென்ற குறிப்பு இவனுடைய மெய்க்கீர்த்தியிலும் இவனுக்குப் பின் வந்தோர் மெய்க்கீர்த்திகளிலும் காணப்படுகின்றது. முதலாம் குலோத்துங்கனுடைய மெய்க்கீர்த்தி "புகழ் சூழ்ந்த புணரியகழ் சூழ்ந்த புவியில்", "பென்னேமியளவுந் தன்னேமி நடப்ப" என்று கூறுகின்றது. விக்ரம சோழன் "பூமாலையடைந்து பொன்மாலை திகழ", "பூமாது புணர புவிமாது வளர" என இரண்டு மெய்க்கீர்த்திகள் கொண்டவன். அவனுடைய முதலாவது மெய்க்கீர்த்தியில் "அகில புவனமும் கவிப்பதொரு புது மதி போல வெண்குடை மீமிசை நிற்ப…" என வருகின்றது. இவ்வாறு கூறுவது உண்மையோடு தொடர்புபட்டதாக இருக்க வேண்டுமென்ற நிலைமாறி மரபு வழிக்கூற்றாக மாறிவிடுகின்றது. மெய்க்கீர்த்தியும் பொய்க்கீர்த்தியைத் தான் பாடுகின்றதென்றும் புலவர்கள் ஏனைய கவிதைகளைப் போலவே மெய்க்கீர்த்தியையும் பாடியுள்ளனரென்றும் அறிஞர்கள் கூறும் நிலை ஏற்படுகின்றது.

(13 புள்ளிகள்)

ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

எமது பண்பாட்டில் "பாட்டி கதை சொல்லும் மரபும்" குழந்தை இலக்கிய மரபாகும். குழந்தை இலக்கிய மரபின் செழுமையான ஒரு கூறாக பாட்டி கதை மரபினைக் குறிப்பிடலாம். பாட்டியினுடைய ஆர்வம், அபிநயம், அரவணைப்பு இவைகளோடு முற்றத்து மண்ணும் நிலவும் மரம், செடி, கொடியும் எமது குழந்தை இலக்கியப் பாரம்பரியத்தின் ஊற்றுக்கால்களாக கொள்ளவேண்டியவை. தாய்மார்கள் பாடிய பாடல்களை அடியொற்றிக் குழந்தைகளும் நாளடைவிலே பாடத் தொடங்கிவிடும். ஓசைநயமும், வாய்ப்பாட்டு ரீதியாகத் திரும்பத் திரும்ப இடம் பெறும் இலகுவான சொல்லாட்சியும், ஆர்வத்தைத் தூண்டும் தன்மைகளும், வாய்மொழியாக வழங்கிவரும் குழந்தைப் பாடல்களின் முக்கிய தன்மையாகும்.

தமிழில் தோன்றிய குழந்தை இலக்கியங்கள் ஓரளவுக்கு 'அறிதல்' முறையையும் பெரும்பாலும் புத்திமதி புகட்டுவதையுமே தம் பிரதான நோக்கமாக கொண்டிருந்தன. தமிழிலே ஆரம்பகாலக் குழந்தை இலக்கியங்கள் என்று கூறப்படும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலியன அறநீதிக்கருத்துக்களை அகரவரிசையில் கூறுவனவாகவே அமைந்துள்ளன. குழந்தை அகரவரிசையை அறிவதனூடு அறக்கருத்துக்களை அறிய வேண்டும். அறக்கருத்துக்களை அறிவதோடு அகரவரிசையை நினைவுபடுத்த வேண்டும் என்பதே இவ்விலக்கியங்களின் பிரதான நோக்கமாகும். அக்காலச் சூழ்நிலையிலும், கல்வி முறையிலும், கற்கத் தொடங்கும் வயதெல்லை மரபிலும் ஓரளவுக்கு இது சாத்தியமானதாகவே இருந்தது. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி முதலியன அருளிச் செய்யப்பட்டன என்று கூறும் பொழுதே அதன் பொருட்பரப்பு இலகுவாக புலப்படுகின்றது.

1) குழந்தை இலக்கிய பாரம்பரியத்தின் ஊற்றுக்கால்கள் எவை?
2) குழந்தைகள் எவ்வாறு பாடத் தொடங்குகின்றன?
3) குழந்தைப் பாடல்களினுடைய முக்கிய பண்புகளாக கருதப்படுபவை எவை?
4) அறக்கருத்துக்களை அகர வரிசையில் கூறும் இலக்கியங்களாக இங்கு கூறப்பட்டவை எவை?
5) குழந்தைகள் அறக்கருத்துக்களை அறிவதனூடாக பெறுகின்ற மொழிசார் அனுகூலம் யாது?
6) அகர வரிசைப்படி அறக்கருத்துக்களை குழந்தை நினைவில் வைத்திருக்க சாத்தியமாக அமைந்தவை எவை?

(6x2 = 12 புள்ளிகள்)

(13 + 12= 25 புள்ளிகள்)

03) பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 – 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

அ) மாணவரும் நிகழ்நிலைக் கற்றலும்
ஆ) உணவுப் பழக்கவழக்கமும் ஆரோக்கியமும்
இ) பேராசிரியர் கா.சிவத்தம்பியின் தமிழியற்பணிகள்.
ஈ) புவி வெப்பமடைதலும் அதன் பாதிப்புக்களும்
உ) ஊருடன் கூடி வாழ் (25 புள்ளிகள்)

## பகுதி – II

04) அ) சோழர் கால சிற்றிலக்கியங்களை வகைப்படுத்துக.
ஆ) பரணி இலக்கியத்தின் அமைப்பை விளக்கி அது சோழர் காலத்தில் அடைந்த வளர்ச்சியினை எடுத்துக்கூறுக.
இ) பல்லவர் கால பக்தி இலக்கியம் சோழர் கால காவியங்களில் ஏற்படுத்திய செல்வாக்கினை சுருக்கமாக விளக்குக. (15 புள்ளிகள்)

05) அ) நாயக்கர் கால சிற்றிலக்கியங்களை வகைப்படுத்துக.
ஆ) நாயக்கர் காலத்தில் சிற்றிலக்கியங்கள் அதிகம் தோன்றியமைக்கான காரணங்களைத் தெளிவுபடுத்துக
இ) காளமேகப் புலவரின் கவியாற்றலை மதிப்பிடுக (15 புள்ளிகள்)

06) அ) 19 ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் எழுந்த மரபு ரீதியான இலக்கிய வடிவங்களை வகைப்படுத்துக.
ஆ) 19 ஆம் நூற்றாண்டில் எழுந்த மரபுசார் இலக்கியங்களின் பண்புகள் யாவை?
இ) இலங்கையில் அகராதிகள் தோன்றி வளர்ந்தவாற்றை எடுத்துக்காட்டுக. (15 புள்ளிகள்)

07) அ) ஈழத்து விமர்சன வளர்ச்சி பற்றிக் குறிப்பிடுக.
ஆ) ஈழத்து நாடக வளர்ச்சிப் போக்குகளை இனங்காண்க.
இ) உரைநடை வளர்ச்சியில் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் பங்களிப்பு (15 புள்ளிகள்)

08) அ)

1) 'நாற்பது வயதைக் கடந்த அந்த வீட்டின் பெண்மணி வாசலில் கோலமிட்டாள்'. இவ்வாக்கியத்திலுள்ள பொருள் மயக்கத்தை நீக்கி எழுதுக.

2) ''பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட நூலகத்தைத் திறந்து வைப்பதற்காகக் கல்வியமைச்சர் நாளை வருகிறார்''. என்னும் தகவலை அதிபர் காலைப் பிரார்த்தனையில் அறிவித்தார். இவ்வாக்கியத்தில் உள்ள வழுவைச் சுட்டிக்காட்டி அதனை வழுவற்ற வகையில் எழுதுக.

3) பின்வரும் வாக்கியங்களை 'செய' எச்சத்தைப் பயன்படுத்தி இணைக்குக.
   1. மலிங்கா பந்து வீசினார்.
   2. சங்கக்காரா துடுப்பெடுத்தாடினார்.
   3. ஜெயவர்த்தனா பிடியெடுத்தார்.

4) ''இதுதான் நாம் கவிதையாற் பெறும் பயன்'' இதில் இடம்பெற்றுள்ள இடைச் சொற்கள் யாவை? அவை என்ன பொருளைத் தருகின்றன?.

5) பின்வரும் சொற்களை அவற்றில் இடம் பெற்றுள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி சரியான முறையில் எழுதுக.
   1. கோவிச்சிட்டான்
   2. பயித்தங்காய் (10 புள்ளிகள்)

ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று பற்றிச் சிறுகுறிப்பு வரைக.
   1. மாற்றொலியன்கள்
   2. வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப்புணர்ச்சி
   3. கூட்டுவாக்கியம் (5 புள்ளிகள்)